# வழங்குநர்களுக்கான நன்னடத்தை விதிமுறைகள்

ஃப்ரூட் ஆஃப் த லூமிலும் மற்றும் நம்முடன் இணைந்த நிறுவனங்களிலும் ("FOTL") நாம் மிக உயர்ந்த தரத்திலான தொழில் நெறிமுறைகளின் படி தொழில் நடத்துவதற்கும் மற்றும் மனித உரிமைகளையும் சுற்றுச்சூழலையும் மதிப்பதற்கும் உறுதி பூண்டுள்ளோம். ஒப்பந்ததாரர்கள், உரிமதாரர்கள் மற்றும் குறித்தறிவிக்கப்பட்ட பிற வணிகப் பங்குதாரர்கள் மட்டுமல்லாது எங்களுடைய தயாரிப்புகளை விநியோகம் செய்யும் அனைத்து நிலையங்களும் (இவர்கள் அனைவரும் ஒருங்கிணைந்து "வழங்குநர்கள்" என அழைக்கப்படுகின்றனர்) இதே பொறுப்பைக் கொண்டிருக்க வேண்டும் என நாங்கள் அவசியப்படுகிறோம். வழங்குநர்களுக்கான நன்னடத்தை விதிமுறைகளில் உள்ள தரநிலைகளின் படி வழங்குநர்கள் தங்களுக்கான பொறுப்பைப் பூர்த்தி செய்கிறார்கள் என்பதையும் மற்றும் அவர்கள் சர்வதேச தொழிலாளர் நிறுவனத்தின் அடிப்படை மரபுகளின் கோட்பாடுகள் மற்றும் நியாயமான உழைப்புக்கான சங்கத்தின் நன்னடத்தை விதிமுறைகள் ஆகியவற்றால் வழிநடத்தப்படுகின்றனர் என்பதையும் நாங்கள் உறுதி செய்கிறோம்.

## ***<u>மக்கள்-மையம்</u>***

<u>வேலைவாய்ப்பு சார்ந்த உறவுகள்</u>: வழங்குநர்கள் பணியாளர்களுக்கு மதிப்பளிக்கும் பணி விதிகளையும் நிபந்தனைகளையும் பின்பற்றி அதன் படி நடந்துகொள்வார்கள் மற்றும் குறைந்தபட்சமாக, தேசிய மற்றும் சர்வதேச தொழிலாளர் மற்றும் சமூக பாதுகாப்புச் சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளின் கீழ் அவர்களது உரிமைகளைப் பாதுகாப்பார்கள.

<u>உடல்நலம் மற்றும் பாதுகாப்பு</u>: வழங்குநர்களின் செயல்பாடுகள் காரணமாக ஏற்படும் விபத்துக்களையும், உடல் நலத்துக்கு ஏற்படும் தீங்குகளையும் தடுக்க ஒரு பாதுகாப்பான மற்றும் ஆரோக்கியமான பணியிடச் சூழலை வழங்குநர்கள் ஏற்படுத்தித் தருவார்கள். வழங்குநர்களுக்குச் சொந்தமான அல்லது அவர்களால் இயக்கப்படும் தங்கும் கூடங்கள் உள்ளிட்ட வழங்குநரின் தளங்கள் முழுவதும் உள்ள சூழ்நிலைகள் பாதுகாப்பாகவும், சுத்தமாகவும், பாதுகாப்பு மற்றும் ஆரோக்கியம் தொடர்பான பொருந்தக்கூடிய விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கானத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் விதமாகவும் அல்லது அவற்றை மிஞ்சும் விதமாகவும் இருக்கவேண்டும். பணியாளர்கள் தங்கள் பணிகளைப் பாதுகாப்பாக மேற்கொள்ளும் பொருட்டு அவர்களுக்கு பயிற்சியளிக்கப்பட்டு போதுமான சாதனங்கள் வழங்கப்பட்டிருக்க வேண்டும்.

<u>குழந்தைத் தொழிலாளர்</u>: வழங்குநர்கள் உள்ளூரில் உள்ள கட்டாயப் பள்ளி வயதுக்குப் புறம்பாகவோ அல்லது பொருந்தக்கூடிய சட்ட ரீதியான வேலைவாய்ப்பு வயதுக்குப் புறம்பாகவோ தனிநபர்களைப் பணியில் அமர்த்த மாட்டார்கள். விளம்பரங்களிலோ அல்லது ஊடகங்களிலோ பயன்படுத்தப்படும் குழந்தை நடிகர்கள் அல்லது மாடல்களைத் தவிர, எந்தச் சூழ்நிலையிலும் 15 வயதுக்கு கீழ் உள்ள பணியாளர்களை வழங்குநர்கள் பணியில் அமர்த்த மாட்டார்கள் மற்றும் பொருந்தக்கூடிய குழந்தைத் தொழிலாளர் ஒழுங்குமுறைகளுக்கு உடன்பட்டு மட்டுமே அவர்களைப் பணியில் அமர்த்துவார்கள்.

<u>கட்டாயத் தொழிலாளர்கள் </u>: சிறைத் தொழிலாளிகள், ஒப்பந்தக் கூலிகள் அல்லது அடிமைத் தொழிலாளிகள், கொத்தடிமைகள் ஆகியோரை மட்டுமல்லாது பிறறையும் உள்ளடக்கிய கட்டாயத் தொழிலாளர்களை வழங்குநர்கள் பயன்படுத்தமாட்டார்கள். வழங்குநர்கள் தங்களுடைய தளங்கள் ஆள்கடத்தலுக்குப் பயன்படுத்தப்படாமல் இருப்பதை உறுதி செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு இத்தகைய செயல்பாடுகளுக்கான தங்களுடைய வழங்கல் சங்கிலித் தொடர்களைக் கண்காணிப்பார்கள்.

<u>துன்புறுத்துதல் அல்லது தவறாகப் பயன்படுத்துதல்</u>: வழங்குநர்கள் அனைத்து ஊழியர்களையும் மதிப்புடனும் மரியாதையுடனும் நடத்த வேண்டும். பணியாளர்கள் யாரும் உடல் ரீதியான, பாலியல் ரீதியான, மன ரீதியான அல்லது வாய்மொழியான துன்புறுத்தல்களுக்கோ அல்லது

துஷ்பிரயோகங்களுக்கோ உட்படுத்தப்படாதிருப்பதை உறுதிப்படுத்தும் நடைமுறைகளை வழங்குநர்கள் வைத்திருப்பார்கள்.

பாகுபாடின்றி இருத்தல்: பணியமர்த்தல், ஊதியம், பணி உயர்வு, ஒழுக்கம், பணி நீக்கம் அல்லது பணி ஓய்வு உள்ளிட்ட வேலைவாய்ப்பு சார்ந்த விஷயங்களில் பாலினம், இனம், மதம், வயது, இயலாமை, பாலின நாட்டம், நாட்டினம், தொழிற்சங்க சார்பு, அரசியல் கருத்து, சமூகப் பிரிவு அல்லது இனப் பூர்வீகம் ஆகியவற்றின் அடிப்படையில் வழங்குநர்கள் பாரபட்சம் காட்ட மாட்டார்கள்.

பணி நேரங்கள்: வழங்குநர்கள் பணியாளர்களைப் பொருந்தக்கூடிய சட்டத்தால் அனுமதிக்கப்பட்ட வழக்கமான மற்றும் மிகுதியான பணி நேரங்களுக்கு அதிகமாக வேலை செய்யப் பணிக்க மாட்டார்கள். எந்த சமயத்திலும், வழக்கமான வேலை வாரமானது 48 மணி நேரத்தைத் தாண்டாது மற்றும் பணியாளர்கள் ஒவ்வொரு ஏழு-நாள் காலத்திலும் குறைந்தபட்சம் தொடர்ச்சியாக 24 மணி நேர ஓய்வுக்கு அனுமதிக்கப்படுவார்கள். அனைத்து மிகுதி நேர வேலையும் பரஸ்பர ஒப்புதலுடனேயே மேற்கொள்ளப்படும். வழங்குநர்கள் மிகுதி நேர வேலையைச் செய்யுமாறு வழக்கமான அடிப்படையில் கேட்டுக்கொள்ள மாட்டார்கள் மற்றும் மிகுதி நேர வேலைக்கு ஓர் உயர் மதிப்பு விகிதத்தில் ஊதியமளிப்பார்கள். விதிவிலக்கான சந்தர்ப்பங்களைத் தவிர, வழக்கமான மற்றும் மிகுதியான வேலை நேரங்களின் கூடுதல் 60 மணி நேரத்தைத் தாண்டக்கூடாது.

ஊதியம்: ஒவ்வொரு பணியாளருக்கும் அவருடைய அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குப் போதுமான அளவு வழக்கமான பணி வாரத்திற்கான ஊதியத்தை பெறவும் மற்றும் செலவுகள் போக மீதம் கொஞ்சம் வருமானத்தை வைத்திருக்கவும் உரிமை உண்டு. வழங்குநர்கள் குறைந்தபட்ச சம்பளம் அல்லது தற்போதுள்ள பொருத்தமான சம்பளம், இவ்விரண்டில் எது அதிகமோ அதை அளிப்பார்கள் மற்றும் அவர்கள் சம்பளத்துக்கான அனைத்து சட்டபூர்வமான தேவைகளையும் பின்பற்றுவார்கள் மற்றும் சட்டப்படியோ அல்லது ஒப்பந்தப்படியோ தேவையாக இருக்கும் எந்த இதரப் பலன்களையும் வழங்குவார்கள். ஊதியமானது பணியாளர்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யாமலும், அவர்களுடைய செலவுகள் மற்றும் சேமிப்புகளுக்கான வருமானத்தை அளிக்காமலும் இருக்கும் இடங்களில் அவற்றை அளிக்கின்ற வகையிலான ஓர் ஊதியம் பெறும் நிலைக்குப் படிப்படியாக அவர்கள் முன்னேறுவதற்குத் தகுந்த நடவடிக்கைகளை வழங்குநர்கள் மேற்கொள்வார்கள்.

சங்கம் அமைப்பதற்கான மற்றும் கூட்டாக பேரம் பேசுவதற்கான சுதந்திரம்: வழங்குநர்கள் சங்கம் அமைப்பதற்கான மற்றும் கூட்டாக பேரம் பேசுவதற்கான சுதந்திரம் போன்ற ஊழியர்களின் உரிமைகளுக்கு மதிப்பளித்து அங்கீகாரம் அளிக்க வேண்டும்.

## ***உலக- விழிப்புணர்வு***

வழங்குநர்கள் தங்கள் செயல்பாடுகள் சுற்றுச்சூழலில் ஏற்படுத்தும் எதிர்மறை தாக்கத்தைத் தணிப்பதற்கான பொறுப்பான நடவடிக்கைகளை மேற்கொள்வார்கள். குறைந்தபட்சமாக, வழங்குநர்கள் தீங்கு விளைவிக்கும் பொருட்களின் முறையான சேமிப்பு மற்றும் அகற்றம் ஆகியவற்றை உள்ளடக்கிய சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் அனைத்து உள்ளூர் மற்றும் பொருந்தக்கூடிய சர்வதேச சட்டங்களுக்கு இணங்கி நடந்துகொள்வதும், ஆற்றல் பயன்பாட்டையும், வீணாகுதலையும் குறைத்து, இயற்கையான ஆதாரவளங்களின் பயன்பாட்டை மேம்படுத்தி மறுசுழற்சியை அதிகரிக்கும் விதமாக தொழிலை நடத்துவதும் இதற்கு அவசியமாகிறது.

## ***தயாரிப்பின் நம்பகத்தன்மை***

சட்டங்களைப் பின்பற்றி நடத்தல்: இந்த நன்னடத்தைக் கோட்பாடுகளின் வரையறைகளைப் பின்பற்றுவதோடு கூடுதலாக, வழங்குநர்கள் தங்கள் செயல்பாடுகளுக்குப் பொருந்தக்கூடிய அனைத்து சட்டங்கள், ஒழுங்குமுறைகள் மற்றும் உடன்படிக்கைகள் ஆகியவற்றையும் அனுசரிக்க வேண்டும்.

வணிக நன்னெறிகள்: வழங்குநர்கள் எந்த வடிவத்திலும் ஊழல் செய்வதோ, மிரட்டிப் பணம் பறிப்பதோ அல்லது தயாரிப்பை அல்லது பொருள் ஆதாரங்களைத் தவறாகச் சித்தரிப்பதோ கண்டிப்பாகத் தடைசெய்யப்பட்டுள்ளது. இந்தத் தடையில் தேவையற்ற அல்லது முறையற்ற ஆதாயத்திற்காகவும், கோரப்படும்போது மூலப்பொருட்களின் ஆதாரங்களை வெளியிடாமல் இருப்பதற்காகவும் இலஞ்சம் கொடுத்தல் அல்லது பெறுதல் உள்ளடங்குகிறது மற்றும் இது மட்டுமல்லாது பிறவும் இதில் உள்ளடங்கும். இத்தடையை மீறுவதால் எஃப்ஓடிஎல் வழங்குநரை உடனடியாக நீக்கம் செய்து, வழங்குநரைச் சட்ட ரீதியான நடவடிக்கைகளுக்கு உட்படுத்தக்கூடும்.

துணை ஒப்பந்ததாரர்கள்: ஓடிஎல்லின் தயாரிப்புப் பொருட்கள் அல்லது பாகங்கள் ஆகியவற்றின் தயாரிப்பில் எஃப்ஓடிஎல்-ன் எழுத்துப்பூர்வமான முன் அனுமதியின்றி வழங்குநர்கள் துணை-ஒப்பந்ததாரர்களைப் பயன்படுத்த மாட்டார்கள் மற்றும் துணை-ஒப்பந்ததாரர்கள் இந்த நன்னடத்தைக் கோட்பாட்டிற்கு இணங்குவதாக எழுத்துப்பூர்வமாக சம்மதித்த பின்பே அவர்களைப் பயன்படுத்துவார்கள்.

சுங்கவிதிகளைப் பின்பற்றுதல்: வழங்குநர்கள் பொருந்தக்கூடிய அனைத்து சுங்க விதிகளுக்கும் இணங்கி நடப்பார்கள் மற்றும் தயாரிப்புகளைச் சட்டத்துக்குப் புறம்பாக சரக்கேற்றி அனுப்புவதிலிருந்து பாதுகாக்கும் திட்டங்களை ஏற்படுத்தி அவற்றைப் பேணிப் பராமரிப்பார்கள்.

பாதுகாப்பு: அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்கு சரக்குகளைக் கப்பல் மூலம் மாற்றம் செய்வதற்குத் தேவையாக விளங்கும் தீவிரவாதத்துக்கு எதிரான சுங்கம் மற்றும் வர்த்தக கூட்டாண்மை (சி-டிபிஏடி) வரையறைகளுக்கு இணங்கி நடப்பது மட்டுமல்லாமல் பிறவற்றையும் உள்ளடக்கிய, எஃப்ஓடிஎல்லின் தயாரிப்புகள் மாற்றம் செய்யப்படுவதில் மறைமுகமான சரக்குகள் (உதாரணம்: ,போதை மருந்துகள் மற்றும் பிற கடத்தல் பொருட்கள்) புகுத்தப்படுவதிலிருந்து பாதுகாப்பு அளிக்கும் பாதுகாப்பு நடைமுறைகளையும் வழங்குநர்கள் பேணிப் பராமரிப்பார்கள்.

## *செயல்முறையாக்கம் மற்றும் அமலாக்கம்*

இடுகையிடுவதற்கான தேவைகள்: வழங்குநர்கள் இந்த நன்னடத்தை விதிமுறைகளை அனைத்து ஊழியர்களும், பார்வையாளர்களும் அணுகும் வகையிலும், எளிதில் பார்க்கும் வகையிலும் அமைந்த ஓர் இடத்தில் வெளிநாடுகளிலிருந்து இடம்பெயர்ந்த பணியாளர்கள் உட்பட அனைத்து ஊழியர்களாலும் புரிந்துகொள்ளக்கூடிய மொழிகளில் பார்வைக்கு வைக்க வேண்டும். வழங்குநர்கள் இந்த நடத்தை விதித் தொகுப்பின் அம்சங்கள் குறித்து வருடந்தோறும் அனைத்துப் பணியாளர்களுக்கும் தகவலளித்து பயிற்சியளிப்பார்கள்.

பதிவேடுகள் பராமரித்தல்: இந்த நன்னடத்தைக் கோட்பாடு பின்பற்றப்படுகிறதா என்பதை சோதனை செய்யும் பொருட்டு இந்த நன்னடத்தைக் கோட்பாட்டின் ஒவ்வொரு அம்சத்துக்கும் உரிய முழுமையான மற்றும் துல்லியமான ஆவணங்களை வழங்குநர்கள் பராமரிப்பார்கள்.

வழங்குநருக்கான வழிகாட்டுதல்கள்; உரிமதாரரின் சமூக இணக்கத்திற்கான கையேடு : எங்கெல்லாம் பொருந்துகிறதோ அங்கெல்லாம் வழங்குநர்கள் www.fotlinc.com என்ற FOTL -ன் பெருநிறுவன இணையதளத்தில் காணப்படும் வழங்குநர்களுக்கான கையேட்டில் விவரிக்கப்பட்டுள்ள தேவைகளுக்கு இணங்கி நடப்பார்கள்.

மதிப்பீடுகள் மற்றும் திருத்தியமைக்கும் செயல்பாடு: இந்த நன்னடத்தைக் கோட்பாடு அனுசரிக்கப்படுவதை உறுதி செய்யும் பொருட்டு தளத்தில் நேரடியாகவோ மற்றும்/அல்லது இணையம் வழியாக மெய்நிகராகவோ மதிப்பீடுகளை மேற்கொள்ள நிறுவனத்தில் உள்ள தணிக்கையாளர்களையும் மற்றும் சார்பற்ற தணிக்கையாளர்களையும் FOTL பயன்படுத்துகிறது. வழங்குநர்கள் இத்தகைய எல்லா மதிப்பீடுகளுக்கும் முழுமையாக ஒத்துழைத்து விரிவான இணக்க

ஆவணங்களை திறனாய்வுக்காக அளிப்பார்கள். வழங்குநர்கள் FOTL உடன் இணைந்து பணியாற்றி இணக்கம்-ஏற்படாத பகுதிகளை நியாயமான முறையில் சரிசெய்ய திருந்திய செயல் திட்டங்களை உருவாக்குவார்கள்.

விதிமீறல்கள் குறித்து புகார் அளித்தல்: இந்த விதிமுறைகள் மீறப்படுவது குறித்து புகார் அளிக்க, FOTL இன் பெரு நிறுவனத்திற்கான சமூகப் பொறுப்புகள் துறையை +1-270-935-2588 என்ற தொலைபேசி எண்ணிலோ, code@fotlinc.com என்ற மின்னஞ்சல் முகவரியிலோ தொடர்பு கொள்ளலாம் அல்லது ஒரு மொபைல் சாதனத்தைப் பயன்படுத்தி குறியீட்டை வலப்புறமாக ஸ்கேன் செய்யலாம். தயவுசெய்து பிரச்சினையில் சம்பந்தப்பட்ட நபர்கள் மற்றும் நடந்துள்ளதாகக் கூறப்படும் விதிமீறல்(கள்) தொடர்பான விரிவான தகவல்களையும், பிரச்சினைக்கு நேரடியாகத் தீர்வு காண்பதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கை விவரங்களையும், பிரச்சினை தொடர்பாக உங்களிடம் இரகசியமாகப் பேசும் பொருட்டு உங்களுடைய தொடர்புக்கான தகவல்களையும் தயவுசெய்து அளிக்கவும். இந்த நடத்தை விதித் தொகுப்புக்குப் புறம்பான விதிமீறல் குறித்து தகவலளிப்பவர்கள் அல்லது இந்த நடத்தை விதித் தொகுப்புக்குப் புறம்பாக நடக்க சாத்தியமுள்ள எந்த விதிமீறல் குறித்த விசாரணைக்கும் உதவுபவர்கள் அல்லது அதில் பங்குகொள்பவர்கள் மீதான எந்த விதமான எதிர்-தாக்குதல் நடவடிக்கையையும் நாங்கள் கண்டிப்பாகத் தடை செய்கிறோம். எந்த விதமான பதிலடி நடவடிக்கையும் மேலே குறிப்பிட்டதுபோல எஃப்ஓடிஎல்-க்குத் தெரியப்படுத்தப்பட வேண்டும்.

திருத்தம். பிப்ரவரி 2022

FRUIT OF THE LOOM · Bestform · BVD · SPALDING · RUSSELL ATHLETIC · VANITY FAIR LINGERIE · JERZEES